Donation for Orphanages

* 345 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government of India have allotted any funds out of the amount donated by an Indian Lady (Selvi Miya Doss) for orphanages in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த அம்மையாரிடமிருந்து ஒரு தொகை அனாதை இல்லங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று முன்பிருந்த அமைச்சர் கூறியிருக்கிறார்கள். தற்போது அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். பழையகாலத்தில் ஒதுக்கப்பட்டு இப்பொழுது நின்றுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மிஸ் மியா தாஸ் மத்திய அரசாங்கத்தினிடம் கொடுத்துள்ள நன்கொடையிலிருந்து கொடுத்திருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு எழுதப்படவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : நமது தமிழகத்தில் இப்படிப்பட்ட அனாதை இல்லங்கள் எத்தனை இருக்கின்றன? அவற்றிலே அரசின் சார்பாக நடத்தப்படும் அனாதை இல்லங்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எத்தனை அனாதை இல்லங்கள் என்று இப்பொழுது சரியான புள்ளிவிவரம் தர முடியாத நிலையில் நான் இருக்கிறேன் என்றாலும், அரசாங்கத்தின் சார்பில் இன்றைக்கு எந்தவித அனாதை இல்லங்களும் நடைபெறவில்லை. ஆனால், அரசாங்க மானியத்தைப் பெற்று இன்றைக்கு அந்த இல்லங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : இம்மாதிரியான அனாதைச்சாலைகளை அரசாங்கம் நடத்துவதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தனியார்களாலும், மிஷன்களாலும் நடத்தப்படும் அனாதை இல்லங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் இப்பொழுது தான் பதில் சொன்னேன். தனியார் நடத்துகின்ற இல்லங்களுக்கு மானியத் தொகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தொகையைக்கூட, இப்பொழுது ஒருவருக்கு 10 ரூபாய் என்று இருந்ததை 12 ரூபாயாகக் கூட அதிகரித்து இருக்கிறோம்.